**O.S. 6/2019, 18.11.2021, 11.00 am - 11.05 am**

**வா.சா.2, லட்சுமி, க/பெ.ராஜா, வயது 60**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1ம் வாதி என்னுடைய அக்கா என்றால் சரிதான். நான், 1ம் வாதி, 1, 2 பிரதிவாதிகள் என்னுடைய தகப்பனாரின் இரண்டாவது மனைவியின் பிள்ளைகள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி என்னுடைய தகப்பனாரின் முதல் மனைவியின் பிள்ளை என்றால் சரிதான். தாவா சொத்து மூதாதையருக்கு பாத்தியப்பட்டது என்று காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான், விவரம் அனைத்தும் 2ம் பிரதிவாதி மாணிக்கத்திற்கு தான் தெரியும் என்றால் சரியல்ல, அவர் மீது தான் வழக்கு தொடுத்துள்ளேன். எந்த சொத்திற்கு பட்டா என்னுடைய அம்மா பெயருக்கு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் என்னுடைய அப்பா பெயரிலுள்ள சொத்திற்கு கொடுக்கப்பட்டது. தாவா சொத்தும் இன்னும் பாகம் பிரியவில்லை என்பதை காண்பிக்க கூட்டு பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து குறித்து அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தானியங்கள் கொடுத்ததாக கூறியுள்ளேன், அது என்னென்ன எப்பொழுது கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியலல, 5 வருடத்திற்கு முன்பு கேழ்வரகு, கம்பு கொடுத்தார்கள். என்னுடைய தகப்பனார் உயிருடன் இருந்தபொழுதே என்னுடைய தகப்பனாருக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் 55 செண்ட் நிலத்தை 3ம் பிரதிவாதிக்கு பாகமாக கொடுத்துவிட்டார் என்றால் பாகம் கொடுத்தது தெரியும் ஆனால் அளவு தெரியாது. எனக்கு மற்றும் தாயார், சகோதர, சகோதரிகளுக்கு சுமார் 1 ஏக்கரா 20 செண்ட் எங்களுக்கு பாகமாக என்னுடைய தகப்பனார் ஒதுக்கிவிட்டார் என்றால் சரிதான். பாகமாக வந்த சொத்தை நாங்களும், 3ம் பிரதிவாதியும் தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.